

# புலமைச் சிட்டுக்கள்

கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்

2020

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புலமைச் சிட்டுக்கள்

## 2020ஆம் ஆண்டு புலமைப்பரிசில் மாணவர்களின் கௌரவிப்பு

வெளியீடு

கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைச் சிட்டுக்கள்
# 2020

அதிபர்
**திரு சி.கேதீஸ்வரன்**

பிரதி அதிபர்
**திருமதி.க.செல்வராசா**

## தரம் 5 ஆசிரியர்கள்

5 A திருமதி.யசோதா சசிபாபு
5 B திருமதி.ஜெயகாந்தா உதயகுமார்
5 C திருமதி.ஜெயஸ்ரீ உதயகுமார்
5 D திருமதி.தவமலர் தவராஜசிங்கம்
5 E திருமதி.சுகிதா நிமலேந்திரா
5 F திருமதி. பிரசாந்தி ஸ்ரீகுமரன்
திருமதி மாக்கிறட் செபஸ்ரீபன்
(ஆங்கில ஆசிரியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


2020ஆம் ஆண்டு தரம் 05 மாணவர்கள்
அதிபர், ஆசிரியர்களுடன்

# புலமைச் சிட்டின் உள்ளே...

☞ தமிழ்த்தாய் வாழ்த்து I
☞ தமிழ்மொழி வாழ்த்து II
☞ ஆசிரியர் கீதம் III
☞ பாடசாலைக் கீதம் IV
☞ மகுட வாசகம் V
☞ அதிபரின் உள்ளத்தில் இருந்து VI
☞ வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துரை VIII
☞ உதவிக் கல்விப் பணிப்பாளரின் (ஆரம்பக் கல்வி)வாழ்த்துரை IX
☞ ஓய்வு பெற்ற அதிபரின் வாழ்த்துச் செய்தி X
☞ ஆசிரிய ஆலோசகரின் வாழ்த்துச் செய்தி XI
☞ பிரதிஅதிபரின் உள்ளத்தில் இருந்து XII
☞ இதழாசிரியரின் உள்ளத்தில் இருந்து XIII
01. ஆரணாவின் அனுபவப் பகிர்வு 1
02. சித்தி பெற்ற மாணவர் விபரம் 3
03. எம் இனியவர்களுக்கு... எழுதும் மடல் (கவிதை) 8
04. தரம் 05A வகுப்பு மாணவர்கள் 12
05. தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை பெற்றோர் ஆசிரியர் தொடர்பான ஒரு பார்வை 15
06. The Echo of Life 17
07. தரம் 05B வகுப்பு மாணவர்கள் 18
08. அவசர தொலைபேசி இலக்கங்கள் 21
09. தரம் 05C வகுப்பு மாணவர்கள் 23
10. ஆச்சரியமான தகவல்கள் 26
11. தரம் 05D வகுப்பு மாணவர்கள் 29
12. நல்லொழுக்கமே முதல் படி 32
13. முகமூடி 34
14. தரம் 05E வகுப்பு மாணவர்கள் 37
15. பகவத்கீதை கூறும் அற்புதமான பாடம் 40
16. தரம் 05F வகுப்பு மாணவர்கள் 42
17. முயற்சியும் பயிற்சியும் (கவிதை) 45
☞ நன்றிகள் 49

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த
நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத்
திகழ் பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த
தமிழர் நல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும்
தரித்தநறுந் திலகமுமே
அத்திலக வாசனைபோல்
அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க
இருந்தபெருந் தமிழணங்கே!

பல்லுயிரும் பலவுலகும்
படைத்தளித் துடைக்கினு மோர்
எல்லையறு பரம்பொருள்முன்
இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமுங் களிதெலுங்கும்
கவின்மலையாளமுந் துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே
ஒன்று பல வாகிடினும்
ஆரியம்போல் உலகவழக்
கழிந் தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து
செயன் மறந்து வாழ்த்துதுமே
வாழ்த்துதுமே....
வாழ்த்துதுமே....

**இயற்றியவர் : மனோன்மணியம் பெ.சுந்தரம்பிள்ளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழி வாழ்த்து

**இராகம் : மாண்டு** **தாளம் : ஆதி**

**தான தனத்தன தான தனத்தன தான தனத்தன**

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வானமளந்ததனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்கதமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

**மகாகவி சி.சுப்பிரமணிய பாரதியார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் கீதம்

முத்து முத்தான சித்திரங்கள் - இலங்கை
முற்றத்தில் சிந்திய ரத்தினங்கள்
பற்றும் பாசமும் வைத்தவற்றை - நல்ல
பாதையில் சேர்க்கும் பணி எமதே!
(முத்து முத்தான)

அன்னை மடியில் அரவணைத்த பிள்ளை
பள்ளி வரும் பிஞ்சு பாலகனாய் -அவன்
தன்னம் தனிமையைப் போக்கிடவே - உள்ளத்தில்
நம்பிக்கை அன்பையும் ஊற்றிடுவோம்
(முத்து முத்தான)

எண்ணும் எழுத்தும் உணர்ந்திடுவோம்
உள்ள தேவைகள் அறிந்து பூர்த்தி செய்வோம் - அவன்
ஒழுங்குடன் ஒழுக்கமும் பேணி நல்ல
சிந்தை ஆற்றலை தூண்டிடுவோம்
(முத்து முத்தான)

கற்பித்தல் கற்றல் நிகழ்ந்திடவே
நல்ல கட்டுப்பாட்டுடன் வகுப்பறையில் - தினம்
பெற்ற கடமையை பேணி ஏற்றே
ஞாலம் போற்றும் சமூகத்தை நாம் படைப்போம்
(முத்து முத்தான)

**பொன் ஸ்ரீ வாமதேவன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கீதம்

வாழ்க என்றும் வளமுடன் எங்கள் வித்தியாலயம்
வான்புகழ் ஓங்கியே வாழ்க வாழ்கவே
வான்புகழ் ஓங்கியே வாழ்க வாழ்கவே

(வாழ்க)

மத்திய ஆரம்ப வித்தியாலயம்
மாணவர் நலன் ஓம்பும் வித்தியாலயம்
தேர்ச்சி நிறை கல்வியினைத் தினமும் வழங்கியே
தேசத்தின் பிள்ளைகளை வளர்க்கும் ஆலயம்

(வாழ்க)

அன்பும் அறிவும் நிறைந்த அதிபர் ஆசிரியர் அரவணைப்பில்
ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் பயின்றிடுவோம்
வல்லவராய் நல்லவராய் வாழ வைக்கும் அன்னையின்
தாழ் பணிந்து தனித்துவமாய் உயர்ந்திடுவோமே

(வாழ்க)

**ஆக்கம்**
**திருமதி.பிறேமா மதுரநாயகம்**
**உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்)**
**வலயக்கல்வி அலுவலகம்,**
**கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகுட வாசகம்

கல்வியே கண்

## நோக்கக் கூற்று

வினைத்திறன் மிக்க செயற்பாட்டின் மூலம் வாழத் தகுந்த நற்பிரஜைகளை உருவாக்குதல்

## பணிக் கூற்று

செயற்றிறன் மிக்க சமூகத்துடன் இசைவாக்கம் பெறக் கூடியதாகவும் நல்விழுமியங்களையும் உருவாக்கக் கூடியதுமான இளம் சமூகமொன்றை உழைத்து உருவாக்க வழி வகுப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரின் உள்ளத்திலிருந்து



கிளிநொச்சி நகரப்பாடசாலைகளில் மிகவும் புகழ் பூத்த பாடசாலையாக கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம் விளங்குகின்றது. இப்பாடசாலையானது கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் இருந்து பிரிந்து ஒரு தனிப்பாடசாலையாக இயங்கத்தொடங்கி 10 ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ள நிலையில் தனது வளர்ச்சிக்காலங்களில் கல்வியிலும் ஏனைய இணைபாடவிதான செயற்பாடுகளிலும் பல சாதனைகளை நிலைநாட்டியுள்ளது. மாணவர்கள் தேசிய ரீதியான போட்டிகளிற்குச் சென்று வெற்றி பெற்று வந்த வரலாற்றையும் இப் பாடசாலையானது தனதாக்கிக் கொண்டுள்ளது.

அந்த வகையில் இவ்வாண்டு கொரோனா வைரஸ் ஆனது உலகம் முழுவதையும் நிலைகுலையச் செய்த நிலையிலும் எமது பாடசாலையில் தரம்5 ஆசிரியர்களும், மாணவர்களும், பெற்றோர்களும் பெரும் இன்னல்களை அனுபவித்து புலமைப்பரிசில் பரீட்சையினை எதிர்கொண்டு சிறந்த பெறுபேற்றினையும்பெற்றுக் கொடுத்தனர். பெறுபேற்றின் வரிசையிலே வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் 40 மாணவர்களும் 70புள்ளிகளுக்குமேல் 115 மாணவர்களும் பெற்றுள்ளதோடு உயர்புள்ளியாக செல்வி சிறிதர் ஆரணா 193புள்ளிகளைப் பெற்றுள்ளார். அத்துடன் 93% சித்தியைப் பெற்று அனைத்து மாணவர்களும் பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர். அந்த வகையில் இம்மாணவர்களைக் கற்பித்த ஆசிரியர்களையும், மாணவர்களையும், பெற்றோர்களையும் வாழ்த்தி நிற்கின்றேன்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மேலும் மாணவர்களின் சித்தி வீதத்தை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டு செயலட்டைகளை அச்சடித்து வழங்கிய எமது வலயக்கல்வி அலுவலகத்தின் ஆரம்பக் கல்விப் பிரிவினரையும் வாழ்த்தி நிற்கின்றேன். கிளிநொச்சி மாவட்டமானது சென்ற வருடத்தில் வெட்டுப்புள்ளிக்கு மேல் சித்திபெற்றோர் வீதத்தில் 20ஆம் இடத்திலிருந்து இவ்வருடம் 8ஆம் இடத்திற்கு முன்னேற்றம் கண்டுள்ளது என்றால் அதற்கு அனைவரதும் கடின முயற்சியுமே காரணமாக இருந்தது.

புலமைத்தேர்வு சாதனையாளர்களை பாராட்டி வாழ்த்தும் விழாவிலே வருடா வருடம் வெளியிடப்பட்டு வருகின்ற புலமைச்சிட்டுக்கள் என்ற நூலானது மாணவர்களுக்கான ஓர் ஞாபகச் சின்னமாகும். அந்தவகையில் இவ்வாண்டும் ஒரு போதும் இல்லாத வகையில் கண்ணைக் கவரும் விதமாகக் கல்வி மான்களின் வாழ்த்துச் செய்திகளோடும், மாணவர்களின் புள்ளிகளடங்கிய வர்ணப் புகைப்படங்களோடும், ஆக்கங்கள் மற்றும் வர்த்தக விளம்பரங்களோடும் இவ்வாண்டு வெளிவருவதையிட்டு மனம் மகிழ்கின்றேன். இந்நூலினை ஆக்கி வெளியிட அயராது பாடுபட்ட ஆசிரியர் திருமதி.யசோதா சசிபாபு அவர்களையும் மலர்க் குழுவினரையும் வாழ்த்தி நிற்கின்றேன்.

வளர்ந்து வருகின்ற இப்பாடசாலையானது மேலும் மேலும் கல்வியிலும் ஏனைய இணைபாடவிதான செயற்பாடுகளிலும் சாதனைகளைப் படைக்க வேண்டும். இதற்காக ஒவ்வொரு மாணவர்களும், ஆசிரியர்களும், பெற்றோர்களும் அயராத முயற்சியோடு பாடுபட வேண்டுமென்றும் வேண்டி நிற்பதோடு மேலும் பல சாதனைகளைப் படைக்க வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு.சி.கேதீஸ்வரன்**
**அதிபர்**
**கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலயக்கல்விப் பணிப்பாளரின்
# வாழ்த்துரை



கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம் கடந்த 2011ஆம் ஆண்டில் இருந்து ஆரம்பக்கல்விப் பாடசாலையாக தனியாக இயங்கி வருகின்றது. கல்வி வளர்ச்சியிலும் இணைபாட விதான செயற்பாடுகளிலும் மிகவும் அக்கறை கொண்டு சிறப்பாக இயங்கி வருகின்றது.

2020 ஆம் ஆண்டிற்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 168 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றி வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் 40 மாணவர்களும் 70 புள்ளிகளுக்கு மேல் 115 மாணவர்களும் சித்தி பெற்றுள்ளார்கள். இவ்வாண்டு சித்தி வீதம் 93% ஆகும். பரீட்சையில் சித்தி அடைந்த மாணவச் செல்வங்கள் மேலும் கல்வியில் சிறப்புடன் மிளிர எனது பாராட்டுக்களையும் நல் வாழ்த்துக்களையும் தெவித்துக் கொள்கின்றேன். இம் மாணவச் செல்வங்களின் கல்வியடைவு மேம்பாட்டிற்காக உழைத்த அதிபர், ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் தரம் 5 இல் கல்வி கற்பித்த ஆசிரியர்கள், பெற்றோர்கள் நூலினை ஆக்கி வெளியிடுகின்ற நூல் வெளியீட்டுக் குழு அனைவரையும் வாழ்த்துவதில் பெரு மகிழ்வு அடைகின்றேன்.

"வளர்க பாடசாலையின் புகழ்"

**கி.கமலராஜன்**
**வலயக்கல்விப் பணிப்பாளர்,**
**வலயக்கல்வி அலுவலகம்,**
**கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவிக்கல்விப் பணிப்பாளரின் (ஆரம்பக்கல்வி) வாழ்த்துரை



கிளிநொச்சி நகரிலே புகழ் பூத்த பாடசாலைகளில் ஒன்றாகத் திகழும் கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தின் 2020ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் முகமாக "புலமைச் சிட்டுக்கள்" எனும் நூலிற்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

கடந்த ஆண்டு நாட்டின் கொரோனா என்னும் கொடிய நோயினால் மாணவர்களின் கல்வியிலே பல இடர்பாடுகள் ஏற்பட்ட போதிலும் இப் பாடசாலையின் அதிபர் திரு.சி.கேதீஸ்வரன் அவர்களின் தற் துணிவினாலும் ஆசிரியர்களின் இடைவிடாத உழைப்பு, ஒற்றுமையாலும் பெற்றோர்களின் மனோ பக்குவத்தாலும் மாணவர்களின் அதீத ஆர்வத்தினாலும் புலமைப் பரிசில் பரீட்சையில் சாதனை படைத்து இப் பாடசாலையானது அனைவரும் போற்றும் வகையில் உயர்ந்து நிற்கின்றது.

அந்த வகையிலே பரீட்சைக்கு தோற்றிய 168 மாணவர்களில் வெட்டுப்புள்ளிக்கு மேல் 40 மாணவர்களும் 70 புள்ளிக்குமேல் 115 மாணவர்களும் மொத்தத்தில் 93% மானவர்கள் சித்தியடைந்து இப் பாடசாலைக்குப் பெருமையைத் தேடிக் கொடுத்திருக்கிறார்கள்.

இப் பாடசாலையானது கல்வித் துறையிலே தனது பலத்தினை நிரூபிப்பது மாத்திரமன்றி ஏனைய இணைபாட விதான செயற்பாடுகளிலும் வெற்றியைத் தனதாக்கி வீறு நடைபோட்டுச் செல்கின்றது. இப் பாடசாலை மென்மேலும் சாதனைகளைப் படைத்து எதிர் காலத்தில் சிறந்த கல்வி மான்களை உருவாக்க வேண்டும் என்று இறைவனை வேண்டுகின்றேன்.

**திரு.அ.ரவீந்திரன்**
**உதவிக்கல்விப்பணிப்பாளர் (ஆ.க)**
**வலயக்கல்வி அலுவலகம்**
**கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம் தனிப்பிரிவாக இயங்கத் தொடங்கி பத்து ஆண்டுகளில் கிளிநொச்சி மாவட்டத்தில் கல்வியிலும் இணைபாடச் செயற்பாடுகளிலும் தொடர்ந்து பல சாதனைகளைச் செய்து வருகிறது. இது கிளிநொச்சி நகரப் பாடசாலைகளின் தவிர்க்க முடியாத தேவையாகும் கல்வியே மனித குலத்தின் எல்லா வளர்ச்சிக்கும் அடிப்படையாகும்.

இவற்றை நன்குணர்ந்த எல்லோருடைய நன்மதிப்பையும் பெற்ற புதிய அதிபர் திரு.சி.கேதீஸ்வரன் இவருடன் இணைந்து புதிய கல்விப் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் குறிப்பாக ஐந்தாம் வகுப்பு ஆசிரியர்கள் பொறுப்பை உணர்ந்து ஒத்துழைப்பு நல்கும் பெற்றார்கள் காலநேரம் பாராமல் கண்ணும் கருத்துமாக கல்வி கற்கும் மாணவர்கள் இவர்கள் யாவரும் பாராட்டுக்குரியவர்கள் இவர்கள் அனைவருக்கும் இறையருள் நிறைவாகக் கிடைக்க வேண்டி வாழ்த்துகிறேன்.

இந்தச் சாதனைகளைத் துல்லியமாக வெளிப்படுத்தும் இந்நூல் வெளிவர நல்ல முறையில் வடிவமைத்து வெளிக்கொணர்ந்த ஆசிரியர் திருமதி யசோதா சசிபாபு அவர்களும் பாராட்டுக்கும் வாழ்த்துக்குமுரியவர்.

**நா.சோதிநாதன்**
**(ஓய்வுநிலை அதிபர்)**
**கிளி /கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய ஆலோசகரின் வாழ்த்துச் செய்தி



கிளி/ கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலய மாணவச் செல்வங்களைப் பாராட்டும் இந்நிகழ்விற்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன். 2020ம் ஆண்டு உலகையே அச்சுறுத்தும் Covid-19 இடர்காலத்திலும் கற்றல் செயற்பாபாட்டில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி உயரிய பெறுபேற்றைப் பெற்றுத்தந்த மாணவர்களை வாழ்த்துவதுடன் பல்வேறு சூழ்நிலைகளுக்கு ஏற்ப விடாமுயற்சியுடன் இம் மாணவர்களை வழிப்படுத்திய பாடசாலைக் குழாத்தினரையும் பாராட்டி வாழ்த்துகின்றேன். பாடசாலையின் சிறந்த தலைமைத்துவத்தைப் பின்பற்றி தொடர்ந்து எம்மை எதிர்கொள்ளும் சவால்களுக்கு நல்வழி சமைக்கும் வல்லவர்களாக திகழ்ந்து வெற்றிப் பாதையில் பயணிக்க வாழ்த்துகின்றேன்.

**திரு.பா.ஸ்ரீஸ்குமார்**
**சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்**
**(ஆரம்பக்கல்வி)**
**வலயக்கல்வி அலுவலகம்**
**கிளிநொச்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதி அதிபரின் உள்ளத்திலிருந்து



2020 இல் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றி சித்தி பெற்ற புலமைச்சிட்டுக்களை வாழ்த்துவதில் அகமகிழ்கின்றேன்.

இவ்வாண்டில் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலும் கசடறக்கற்று இறுதிப்பரீட்சைக்குத் தோற்றி சிறந்த பெறுபேற்றையும் பெற்று எமது பாடசாலைக்குத் 93% ஆன சித்தியையும் பெற்றுத் தந்துள்ளனர்.

தாயின் கருவறையில் இருந்து கல்வி கற்கத்தொடங்கும் குழந்தையானது சூழலுக்கேற்ப தன்னமைவாக்கம் பெற்று அறிவுக் கண்களைத்திறக்க ஜோன்டுயின் தத்துவார்த்தத்துக்கேற்ப அனுபவங்களை அனுபவங்களால் அனுபவங்களுக்கூடாக வசதி செய்து கொடுத் திருக்கிறார்கள்.

நற்பிரஜைகளை உருவாக்குவதில் முன்னுதாரணமாகத் திகழும் எமது வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வி கற்று இடைநிலைக்கல்வி கற்க வேறு பாடசாலைகளுக்குச் செல்லும் அனைத்துப் பிள்ளைகளும் உயர்பெறுபேற்றைப்பெற்று நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் வர வாழ்த்தி நிற்கின்றேன்.

அன்னையின் அரவணைப்பிலும் தந்தையின் முத்தத்திலும் முதலிலே பெற்றுக்கொள்ளும் ஆரம்பக்கல்வியைத் தொடர்ந்தும் பிள்ளைகள் கற்றுத் தேறுவதற்கு உறுதுணையாகப் பெற்றோர்கள் நிற்பார்கள் என நம்புகின்றேன்.

புலமைச்சிட்டுக்கள் நன்றே வளர்ந்து நலமாக வாழ்ந்து கல்வியில் வானுயர வாழ்த்தி நிற்கின்றேன்.

**திருமதி.கலையரசி செல்வராசா**
**பிரதி அதிபர்**
**கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைச் சிட்டு ஆசிரியர் உள்ளத்திலிருந்து



"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கமைவாக இப்புவியிலே ஜனனமாகிய ஒவ்வொருவரும் தமது சொற்பகால வாழ்க்கையில் எதையாவது சாதித்துக் காட்ட வேண்டும் எதிர்காலத்தை மிகமிக நல்லதொரு காலமாக அமைத்துக் கொள்ள வேண்டும்.

அந்த வகையிலே 2020ஆம் ஆண்டு மலர்ந்ததும் எமது பாடசாலையில் தரம் 05 மாணவர்களும் அவர்களை கற்பித்த ஆசிரியர்களும் எதிர்பார்ப்புக்களோடும் ஆர்வத்தோடும் கற்றல் கற்பித்தலினை தொடர்ந்தோம். எதிர்பாராத வகையில் திடீரென பங்குனி பதின்மூன்று **"கொரோனா"** என்ற கொடிய வைரசின் கோரத் தாண்டவத்தால் உலகில் மக்கள் பலியாகி வருகிறார்கள் என்ற செய்தி அறிந்ததும் பாடசாலைகளும் ஏனைய பணி நிலையங்களும் மூடப்பட்டன, நாடு முழுவதும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது. அன்றோடு கற்றல் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன, பரீட்சையும் பிற்போடப்பட்டது.

இவ்வாண்டுக்கான கல்வி நடவடிக்கைகள் கொரோனா வைரசின் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட போதிலும் zoom மூலமான வகுப்புக்களும் ஊரடங்கு தளர்வான காலங்களில் ஆசிரியர்கள் தமது வீடுகளிலும் ஏனைய பொது இடங்களிலும் மாணவர்களை அழைத்து கற்பித்தலை மேற்கொண்டார்கள்.

இவ்வாறான ஓர் இடர்காலச் சூழலில் எமது வலயக்கல்வி அலுவலகத்தின் அனுசரணையோடு ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் ஆசிரியர் ஆலோசகர்களின் தயாரிப்பில் உருவான செயலட்டைகள் மாணவர்களின் கற்றலுக்கு மிகவும் உறுதுணையாக அமைந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகக் கவசங்களால் தமது முகங்களை மறைப்புச் செய்து கொரோனாவுக்கு பயந்து பயந்து கற்றலை மேற்கொண்டு பரீட்சையை எழுதிய போதிலும் மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் எமக்கு மிகவும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

168 மாணவர்கள் பரீட்சைக்குத்தோற்றி உயர்புள்ளியாக 193ஐ பெற்று 40 மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்கு மேலாகவும் 70 - 159 வரையான புள்ளிகளை 115 மாணவர்களும் 70 புள்ளிக்குக் குறைவாக 13 மாணவர்களும் பெற்று எமது பாடசாலையின் சித்தி வீதத்தை 93 வீதமாகவும் காட்டி சாதனையை நிலை நாட்டி பாடசாலைக்கு பெருமை சேர்த்துத் தந்துள்ளனர்.

இத்தகைய சாதனைகளை நிலைநாட்டி நிற்கும் மாணவர்களின் படங்களையும் பெறுபேறுகளையும் ஆக்கங்களையும் தாங்கி **"புலமைச் சிட்டுக்கள்"** என்ற பெயரிலே இந்நூல் வெளியாகின்றது மாணவர்களது வெற்றிக்காகப் பாடுபட்ட அதிபர், பிரதி அதிபர், தரம் 05ஆசிரியர்கள் எமது பாடசாலையின் ஏனைய ஆசிரியர்கள், பெற்றோர்கள் செயலட்டை களையும், பயிற்சி வினாத்தாள்களையும் வழங்கிய வலயக்கல்விப் பணிமனை மற்றும் மாகாணக்கல்வித் திணைக்களம் அனைவரையும் வாழ்த்துகின்றேன். **"இடர்காலங்களெல்லாம் கல்விக்கு ஒரு தடையல்ல"** என்பதனை சாதித்துக்காட்டிய இம் மாணவர்கள் எதிர்காலத்திலும் தமது கல்வியினைச் சிறப்பாகத் தொடர்ந்து நற்பெயரையும் புகழையும் ஈட்டி நல்லதோர் ஸ்தானத்திலே நிலை கொள்ள இவ்வாண்டின் புலமைச்சிட்டின் ஆசிரியர் என்ற வகையில் வாழ்த்துகின்றேன்.

**புலமைச்சிட்டு ஆசிரியர்**
**திருமதி.யசோதா சசிபாபு**
**கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரணாவின் அனுபவப் பகிர்வு



"இளமையில் கல்வி சிலையில் எழுதப்பட்ட எழுத்துப் போன்றது. அந்த வகையில் சிறிதர் ஆரணா ஆகிய நான் தரம் 1-5 வரையான எனது ஆரம்பக் கல்வியினை கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்திலே கற்று வந்தேன். இளமையான இந்தப் பாடசாலைக் காலத்தில் கற்றல் செயற்பாடுகள் மட்டுமன்றி இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வந்தேன் விளையாட்டுச் செயற்பாடுகள் எனக்கு மிகவும் விருப்புக்குரியது. இச் செயற்பாடுகளினூடாக மாவட்ட, மாகாணப் போட்டிகளிலும் பங்குபற்றியுள்ளேன். இதன்மூலம் பெற்ற அனுபவங்கள் எனது கற்றல் செயற்பாடுகளை மேலும் இலகுபடுத்தியது.

தரம் 1 இலிருந்து ஆசிரியர்களின் அறிவுறுத்தலின்படி சரிவர செய்து வந்தேன். தரம் 5இல் கல்வி கற்கும் காலத்தில் covid - 19 இடர்பாடு காரணமாக அனைத்து பாடசாலைகளும் கல்வி நிலையங்களும் மூடப்பட்டதன் காரணமாக வீட்டிலிருந்து கல்வி கற்கும் நிலை ஏற்பட்டது. அந்நேரத்தில் தொலைபேசி மூலம் ஆசிரியர்களிடம் சந்தேகங்களைக் கேட்டுத் தெளிந்ததுடன் இணைய வழிமூலமும் கல்வியைத் தொடர்ந்தேன். எனது கற்றலுக்கு ஆசிரியர்களும் எனது அம்மா அப்பாவும் மிகவும் உறுதுணையாக இருந்தார்கள். எனது கற்றலுக்கு தேவையான அனைத்து விடயங்களையும் எனது பெற்றோர் நிறைவு செய்து தந்தார்கள்.

எனக்கு சிறுவயதிலிருந்து சிறப்பான புள்ளிகளைப் பெற்றுக் கொள்ள அவா இருந்தது. அதற்காக நான் முயற்சி செய்தேன். 2020ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையை கொரோனா வைரசின் கொடுமைகளின் மத்தியிலும் எனது பரீட்சையினை வெற்றிகரமாக எதிர்கொண்டேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

193புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் முதல் இடத்தை பெற்றதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன் எனது இந்த வெற்றிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் எனது பெற்றோருக்கும் எனது உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

தொடர்ந்து வரும் கல்வியினையும் நான் சிறந்த முறையிலே கற்க வேண்டுமென்ற அவாவுடன் இருக்கின்றேன். சந்தர்ப்பம் கிடைக்கும் பட்சத்தில் எனது தாய், தந்தையரைப் போன்று வைத்தியத் துறையில் இணைந்து மக்களுக்கு சேவைபுரிவதே எனது எதிர்கால இலட்சியமாகும்.

நன்றி

**சிறிதர் ஆரணா**
**தரம் 5D மாணவி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2020 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்



சிறிதர் ஆரணா
புள்ளி : 193



தோமஸ் டிக்சன்
புள்ளி : 191



ஜோன்சன் சஜித்தா
புள்ளி : 185



சந்திரகாந்தன் அபிநயா
புள்ளி : 184



பிரகலாதன் கனிஸ்கா
புள்ளி : 179



அலோசியஸ் சரண்
புள்ளி : 178



ஜெராட் ஜெனிக்சன்
புள்ளி : 178



முருகையா சுபர்னா
புள்ளி : 176



சுரேஸ்ஆனந்தம் டேனுசன்
புள்ளி : 176



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



சற்குணராசா சாதனா
புள்ளி : 175



சிறிகரன் கயல்மறவன்
புள்ளி : 174



அலிஸ்ரன் வேணுயன்
புள்ளி : 174



திருவாசகம் பமிதா
புள்ளி : 174



பத்மசங்கர் கேஜன்
புள்ளி : 173



ஸ்ரீகாந்தன் றாகவன்
புள்ளி : 173



ஜீவானந்தம் கோசலை
புள்ளி : 173



சிவகுமார் ஆருஷன்
புள்ளி : 173



உதயமோகன் அபிசாந்
புள்ளி : 172



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விஜயபாலு திர்ஷன்
புள்ளி : 170



வசந்தகுமார் ரனோஜன்
புள்ளி : 170



சுரேஸ்குமார் சுஜீவன்
புள்ளி : 170



ஜெயாகரன் ராகவி
புள்ளி : 169



விஜயசுரேஸ் லிவிதன்
புள்ளி : 168



தர்மபாலா சாதுர்ஜன்
புள்ளி : 168



ஸ்ரீதரன் பத்மிதன்
புள்ளி : 167



சுதாஸ்கரன் சஜாளினி
புள்ளி : 167



புனிதராஜன் அபிராமி
புள்ளி : 167



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாலரூபன் ஹேரபிசன்
புள்ளி : 167



இராஜேந்திரன் சங்கீதா
புள்ளி : 166



சிவபாலன் தீபிகன்
புள்ளி : 166



அன்ரன்டயஸ் ஆன்தருணிகா
புள்ளி : 164



கண்ணதாசன் தட்சாயினி
புள்ளி : 164



றெஜினோல்ட்சாள்ஸ் அமன்ரா ஜெயனி
புள்ளி : 164



சுரேந்திரன் தேனுஜா
புள்ளி : 163



பிரபாகரன் பிருந்தாபன்
புள்ளி : 161



சந்திரகுமார் யதுசன்
புள்ளி : 161


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கேதீஸ்வரன் டிலைக்சனா
புள்ளி : 161



சாந்தகுமார் துசிதன்
புள்ளி : 160



சிவசொரூபன் ஹரிதாஸ்
புள்ளி : 160



தபோதனன் பவீனா
புள்ளி : 160

**கல்வி**

பெருமைக்காக தேடி
பெறுவதல்ல...பெற்றதை கொண்டு
பெருமை தேடி கொள்வது



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எம் இனியவர்களுக்கு... எழுதும் மடல்

எம் இனியவர்களுக்கு
எழுதும் மடல் ஒன்று
எங்கள் பள்ளிப் படிப்பு
எவ்வளவோ மகிழ்ச்சியானது
துள்ளித் திரிந்தோம்,
துடியாட்டமாய்
விளையாடினோம்,
கற்பனையில் மிதந்தோம்,
கனவு பல கண்டோம்,
இஷ்டம் போல் எத்தனையோ
குறும்புகள் செய்து மகிழ்ந்தோம்.

அப்போது தான்
நாங்கள் ஐந்தாம் தரத்தில்
அடியெடுத்து வைத்தோம்
அப்பப்பா.... எங்களின்
கற்பனையோ! கற்பனைதான்.

கொலஸிப்
என்ற சொல்லை
அடிக்கடி அழகாகச்
சொல்லி மகிழ்ந்தோம்
நூற்றுத்தொண்ணூற்றொன்பது
புள்ளிகளைப் பெற்று தேசியத்தில்
பரிசு வாங்கும் கனவை
இராத்திரிகள் ஒவ்வொன்றிலும்
இனிக்க... இனிக்க
கண்டோம்.

இருமாதம் படிக்கவில்லை
ஏதோ கொரோனாவாம்
அவசரமாய் ஊரடங்கு
அதிர்ந்தே போனோம்
இருட்டறையில்
இருந்தது போல்
இன்னல் பல
கண்டோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிக்கும் கனவை
பாழடித்த கொரோனாவை
நினைத்து..... நினைத்து
பெருமூச்சு விட்டோம்
நாங்கள்

மீண்டும்......ஒரு நாள்
பள்ளிக்கு வா.... என்றார்
மூச்சடைக்க ஒரு
முகமூடி போடென்றார்
வியர்த்து ..... விறுவிறுக்க
தடுமாறிப் போட்டோம்
நாங்கள்.

எங்கள்,
பள்ளி வாயிலைப் பாருங்கள்
எத்தனை கை கழுவும் ஏற்பாடுகள்
கை கழுவு கை கழுவு
பல்லை நெருடி எங்கள்
ஆசிரியர் பேசியதை
அப்போது தான்
பார்த்தோம்
நெஞ்சு பதறியது.

தள்ளி இரனடா
தோழன் தோள் மீது
கை போடப் போன கரம்
ஆசிரியரின் அதட்டலால்
அறுந்தது போல் ஆனது.
ஆசைகளை அடக்கினோம்
அவர் அவரே
தூர விலகி நின்றோம்
துறவிகளைப்
போலானோம்.

ஏராளம் போட்டிகள் (2020)
இவ்வாண்டு எல்லாம்
இழந்து போனோம்
கொலஸிப்... பயிற்சி
வினாத்தாள்களை
விரக்தியோடு...
செய்தோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தும்மும், இருமும்
துடி துடித்துப் போவோம்
என்னவோ... எனக்கும்
கொரோனாவோ
என்ற அச்சம் தோன்றும்
கண்ணில் நீர் வழியும்
பெருங் கவலையுடன்
ஆசிரியர் பார்க்காத போது
அவசரமாய்,
துடைத்தெடுப்போம்.

சாப்பாடு எப்போதும்
பகிர்ந்துண்ணும் நண்பர்கள் நாம்
ஏற்பாடு செய்தார்கள்
எவர்க்கும் கொடுக்காதே என்று
எட்ட இருந்துண் என்றார்
கெட்ட கோபம் தான் வந்தது.

ஒரு...
விட்டத்தை மட்டும்
வெறித்துப் பார்த்தபடி
உண்டெழுந்தோம்
நாங்கள் எல்லாம்.

பரீட்சை நாள்.......
நெருங்க பதட்டங்கள்
கூடியது
அம்மாவின், அப்பாவின்
அயலாரின், ஆசிரியர்களின்
அதட்டல்களும் கூடியது
நாட்டிலோ.
கொரோனாவால்
சாவுகளும் கூடியது.
பேச்சிழந்து
ஒரு பிணம் போல் ஆகித்தான்
நாங்கள் படித்தோம்.

பரீட்சை நாள்
வந்தது
நெஞ்சுக் குழிக்குள்
அதிர்வலைகள் கூடியது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிஞ்சுகள் நாம்
ஏதோ படித்தவற்றை
எழுத்துக்களால்
பரப்பி விட்டு சலிப்புடனே
எழுந்து வந்தோம்.

இப்படித்தான் நாங்கள்
இன்னலுடன் படித்தோம்
இன்னும் எத்தனையோ
ஆண்டுகள் படித்து
முடிக்க வேண்டும்

குத்தாட்டம் போடும்
கொரோனாவை
நினைத்தால்
சத்தியமாய் எங்களுக்கு
நித்திரையுமில்லை
விம்மலுடன்
என் மடலை
முடிக்கின்றேன்.
இப்படிக்கு
மாணவன்.

**ஆக்கம்**
**பூநகர் கவிப்பிரியா ஆசிரியை**
**கிளி /கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 05A வகுப்பு மாணவர்கள்



ஜெகதீஸ்வரன் கிருசன்
புள்ளி : 149



பிறேம்குமார் வர்மிஷன்
புள்ளி : 148



வரதராசா மதுசன்
புள்ளி : 140



ஜெகதீஸ்வரன் கஸ்ரீபன்
புள்ளி : 143



கருணாநிதி பிரணவன்
புள்ளி : 131



சுரேஸ் நர்மதன்
புள்ளி : 121



கணேசமூர்த்தி சங்கீர்த்தன்
புள்ளி : 121



பழனியாண்டி ஜீவிகன்
புள்ளி : 116



கணபதி அஜீஸ்
புள்ளி : 110



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இராஜேந்திரம் சிரஞ்ஜீவன்
புள்ளி : 107



சாந்தகுமார் ஜிந்துஷா
புள்ளி : 159



சிவகணேஸ் அக்ஷதா
புள்ளி : 159



சத்தியநாதன் அனோசாயினி
புள்ளி : 147



செல்வவினோதரன் ஷகீரா
புள்ளி : 143



அன்ரன்டயஸ் சதுர்சியா
புள்ளி : 134



இந்திரகுமார் அபிசாளினி
புள்ளி : 129



ரஜிதரன் ஆரண்யா
புள்ளி : 127



பாலரூபன் சுதர்சினி
புள்ளி : 126


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




லோகரட்ணம் பிருந்துஷா
புள்ளி : 101



தர்மலிங்கம் நிஷாந்தினி
புள்ளி : 90

# தேசிய மட்ட செயற்பட்டு மகிழ்வோம் போட்டியின் வெற்றியாளர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை பெற்றோர், ஆசிரியர் தொடர்பான ஒரு பார்வை

ஒழுங்கமைக்கப்பட்ட கலைத்திட்டத்துக்கேற்ப முறைசார் கல்வி முறைக்கேற்ப பிள்ளை ஒன்று முதன்முதலாகப் பெற்றுக்கொள்ளும் கல்வியே ஆரம்பக்கல்விமுறை எனலாம். தரம் 05புலமைப் பரிசில் பரீட்சையானது குறைந்த வருமானம் பெறும் பெற்றோர்களுடைய பிள்ளைகளுக்கு உதவிப்பணம் வழங்குவதற்கும், தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் ஆறாந்தரத்துக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கும் 1940ஆம் ஆண்டு அரசினால் அறிமுகம் செய்யப்பட்டது.

மேற்படி நிலைமையானது கடந்த இருதசாப்தங்களாக மாற்றமடைந்து, தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்குத்தோற்றும் பிள்ளைகளின் பெற்றோரின் சமூக மதிப்பு, சமூக அந்தஸ்து என்பவற்றை வெளிப்படுத்துவதற்கு அவர்கள் மேற்கொள்ளும் அதீத முயற்சிகள் காரணமாக இப்பரீட்சை மாணவரது பெற்றோருடைய பரீட்சை என அழைக்கப்படுகிறது. இப்பரீட்சையில் பிள்ளைகள் சித்தியடையாவிட்டால் தமது நன்மதிப்பு குறைந்துவிடுவதாக பெற்றோர்கள் தமக்கிடையே போட்டியிடுவதனால் உளநெருக்கீடுகளுக்கும் உள்ளாகின்றனர்.

**"பரிபூரணமான கல்வியே உலகவிடியலுக்கான வழி"** என யுனெஸ்கோ எடுத்தியம்புகிறது. மாணவர்களுக்கு, ஆசிரியர்கள் பரந்த ஓர் அறிவுத்தொகுதியை சவால்களுக்கு முகம் கொடுத்து அதனூடாகப் பிரச்சினைகளில் இருந்து அவர்களை விடுவிக்கப்படுவதனையே அது விளக்குகின்றது. ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் தம்மிடம் கல்வி கற்கவரும் மாணவர்களுக்கு கல்வியின் நான்கு தூண்களான.

1. அறிவைப்பெறக்கற்றல் (Learning to know)
2. செயலில் ஈடுபடுவதற்காகக் கற்றல் (Learning to do)
3. ஏனையவர்களுடன் சேர்ந்து வாழக்கற்றல் (Learning to live together)
4. வாழக்கற்றல் (Learning to live)

போன்றவற்றை எடுத்தியம்புகின்றது.

கல்வி பரந்தது; மனிதர்களை மனிதர்களாக வாழ வைப்பது என்பதை உணராவிட்டால் எமது நாடும் உலகமும் வன்முறைகளாலும், போட்டி, பொறாமை, முரண்பாடுகளாலும் சிதைந்து விடும். எனவே பரிபூரணமான சமநிலை ஆளுமையுடைய மாணவர்களை உருவாக்குவதே ஆசிரியர்கல்வியின் அடிப்படை நோக்காகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்காக தொடர்ந்து கற்றுக்கொண்டிருக்கும் இலட்சிய ஆசிரியர் தன்னிடம் கல்விகற்கும் அனைத்துப் பிள்ளைகளையும் (தரம் ஐந்து புலமைப்பரிசில் சித்தியடைந்தோர், தரம் ஐந்து புலமைப்பரிசில் சித்தியடையாதோர்) ஒப்பீட்டு ரீதியில் நோக்காது ஒரே பார்வையில் வசதி செய்து கற்பிப்பவராகவே இருப்பார்.

பெரும்பாலான பெற்றோர் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு தமது பிள்ளைகளுக்கு கொடுக்கும் உத்வேகம், ஊக்குவிப்பு போன்றவற்றை இடைநிலைக்கல்வியிலோ, உயர்கல்வியிலோ கொடுக்காது விடுவதனால் தரம் ஐந்து புலமைப்பரிசில் சித்திபெற்ற மாணவர்களில் அதிகளவானோர் தேசியரீதியில் நடைபெறும் பரீட்சைகளில் குறைவான பெறுபேற்றைப் பெற்று பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பை இழந்துவிடுவதாக ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன.

எனவே பெற்றோரைப் பொறுத்த வரையில் தமது பிள்ளைகளுக்கு சுயமாகக் கற்பதற்கான வசதியையும் வழிகாட்டலையும் ஏற்படுத்திக் கொடுப்பதோடு தத்தமது பிள்ளைகளுக்கு ஆரம்பக்கல்விப்புலத்திலே செலுத்தும் கரிசனையையும் அக்கறையையும் தொடர்ந்தும் அவர்களின் வாழ்நாட் கல்விவரை காட்ட வேண்டிய அவசியம் வேண்டப்படுகின்றது.

**திருமதி.ஜெயஸ்ரீ உதயகுமார்**
**ஆசிரியை**
**கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE ECHO OF LIFE

We want the happiness in life. For our better life we dominate others. But it doesn't give you anything what you need. To live a pleasurable life we should learn to treat others as you want them to treat you.

One day a man and his son were walking in a valley Suddenly the boy trips and feels a sharp pain and he screams,
"Ahhhhh

He hears a voice coming from the mountain
"Ahhhhh" and surprised

Filled with curiosity, he screams "Who are you? but the only answer he receives is "who are you?
This makes him angry so he screams. "You are a coward!
And the voice answers: "You are a coward

He looks at his father asking. "Dad, what is going on?
"Son," the man replies, "pay attention!

Then he screams, "I admire you!
The voice answers, "l admire you!
Father shouts" You are wonderful and the voice answers, "You are wonderful

The boy is surprised, but still can't understand
What is going on?

Then the father explains, "People call this, 'ECHO but truly it is 'LIFE It always gives you back what you give out! Life is a mirror of your actions. If you want more love, give more love! If you want more kindness, give more kindness! If you want understanding and respect, give understanding and respect!

This rule of nature applies to every aspect of our lives"

So life always gives you back what you give out, your life is not a confidence, but a mirror of your actions.

**Mrs.Margret Sebastephen**
**Teacher of English**
**Kn/ Kilinochchi central primary vidyalayam**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 05B வகுப்பு மாணவர்கள்



விஜயராசா தணிகன்
புள்ளி : 158



சிறிபத்மராசா தமிழ்குமரன்
புள்ளி : 156



கஜேந்திரன் யதுர்சன்
புள்ளி : 145



செல்வகிஸ்ணன் சஜித்
புள்ளி : 144



தவரூபன் தனுஸ்
புள்ளி : 125



சிவகுமார் டனுஸ்கிளிண்டன்
புள்ளி : 125



வெனிஸ்லி கஸ்ரோ
புள்ளி : 115



கிறிஸ்ரிடானியல் மதுசாளன்
புள்ளி : 110



ரகுநாதன் யதுசன்
புள்ளி : 103



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிறைஞ்சன் கிலப்சன்
புள்ளி : 103



ஞானசுந்தரம் டினோஜன்
புள்ளி : 96



சந்திரகுமார் லக்சனா
புள்ளி : 155



கஜேந்திரன் துவிஷா
புள்ளி : 151



ஜெயமோகன் சோபிஷ்சனா
புள்ளி : 149



யாழ்வேந்தன் பிரிந்தா
புள்ளி : 125



உமாகரன் கிறிஸ்ரினா
புள்ளி : 121



உதயராசா அதிசயா
புள்ளி : 119



மகாலிங்கம் தர்மிகா
புள்ளி : 113


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாகராசா அபிநயா
புள்ளி : 103



அன்ரனிதாஸ் றக்ஷிகா
புள்ளி : 76



இராமர் லக்சிகா

**தாயிடம் அன்பாக இரு**
**தந்தையிடம் பண்பாக இரு**
**உள்ளத்தில் உறுதியோடு இரு**
**ஆசையில் அளவோடு இரு**
**மொத்தத்தில்**
**நம்பிக்கையோடு இரு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசர தொலைபேசி இலக்கங்கள்

## அரசாங்கத்தின் பல்வேறு சேவைகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பாகவுள்ள துரித அழைப்பிலக்கங்கள்

- அரச தீயணைப்புப் பிரிவு - 110
- இராணுவச் செயற்பாடுகள் - 114
- விமானப்படைச் செயற்பாடுகள் - 116
- அவசர அனர்த்த செயற்பாட்டு மையம் (அனர்த்த முகாமைத்துவ நிலையம்) - 117
- தேசிய பாதுகாப்பு தொடர்பான செயற்பாடு - 118
- தொலைத் தொடர்பு சேவைகள் தொடர்பான முறைப்பாடுகள் - 1900
- அரச நிறுவனங்களில் சேவைகளைப்பெறும் போது முகங்கொடுக்கும் அசௌகரியங்கள் - 1905
- மின்சாரம் தொடர்பான முறைப்பாடுகள் (இலங்கை மின்சார தனியார் நிறுவனம்) - 1910
- பரீட்சை நடவடிக்கைகள் தொடர்பான முறைப்பாடுகள் பரீட்சைத் திணைக்களம் - 1911
- சுற்றுலாப்பயணிகள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் (சுற்றுலாத்துறை அமைச்சு) - 1912
- சட்டவிரோத போதைப்பொருள் சட்ட விரோத மதுபானம், புகையிலை தொடர்பான முறைப்பாடுகள் - 1913
- தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையுடன் தொடர்புடைய பாவனையாளர் பிரச்சினைகள் (தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை) - 1914 - 1939
- சட்ட விரோதமாக உழைத்த சொத்துக்கள் தொடர்பில் அறியத்தர - 1917
- அரசாங்க தகவல் மையம் - 1919
- பயிர் சேங்கள் குறித்த விவசாயக் காப்புறுதிப் பிரச்சினைகள் (கமத்தொழில் அபிவிருத்தி அமைச்சு) - 1920
- உள ரீதியான பிரச்சினைகள் மற்றும் குடும்ப பிணக்குகள் தொடர்பான பிரச்சினைகள் - 1926
- சிறுவர் துஷ்பிரயோகங்கள் (தேசிய சிறுவர்பாதுகாப்பு அதிகார சபை) - 1929
- குடும்பப் பிணக்குகள் தொடர்பான பிரச்சினைகள். (மகளிர் உதவிச்சேவைகள்) - 1938
- பற்றுச்சிட்டை செலுத்துதல் தபால் தொடர்பான சகல முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்ளல் மற்றும் தபால் தொடர்பான தகவல்களை விசாரிக்க (தபால் திணைக்களம்) - 1950



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான முறைப்பாடுகள். - 1954
- உள்நாட்டு தனியார் பஸ்கள் தொடர்பான முறைப்பாடு /தகவல்களை வழங்க. (தேசிய போக்குவரத்து ஆணைக்குழு) - 1955
- தீவிர விபத்து தொடர்பான சேவைகள் (இலங்கை தேசிய வைத்தியசாலை) - 1959
- குடிவரவு மற்றும் குடியகல்வு தொடர்பான விபரங்கள். (குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம்) - 1962
- அதிவேகப்பாதை செயல்பாட்டு நிலையம் குறித்து அறிய (நெடுஞ்சாலை அதிவேகப்பாதை செயற்பாட்டு நிலையம்) - 1969
- பாவனையாளர் பிரச்சினைகள். (பாவனையாளர் அதிகார சபை) - 1977
- அபாயகர ஔடதங்களுக்கு அடிமையானவர்களை அதிலிருந்து மீட்பதற்கு ஆலோசனைகளை வழங்கல். (தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டப்பாட்டு சபை) - 1984
- குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் குறித்த முறைப்பாடுகள் - 1985
- மின்சாரம் தொடர்பான முறைப்பாடுகள். (இலங்கை மின்சார சபை) - 1987
- அவசர மருத்துவ சேவை தகவல்கள் மற்றும் அம்புலன்ஸ் வண்டி சேவை - 1990
- காட்டு விலங்குகள், காட்டுயானைகள் பிரச்சனைகள்,காடுகள் சம்பந்தமான சட்ட விரோத நடவடிக்கைகள், மின்சார வேலிகள் உடைதல் தொடர்பான முறைப்பாடுகள். (வனஜீவராசிகள் திணைக்களம்) - 1992
- விஷபோதை மருந்து மற்றும் ஏனைய விசேட தகவல்களுக்கு - 1997
- சுகாதார தகவல்கள், தொற்று நோய்கள், மருந்துகளைப் பெற்றுக் கொள்ளல். போதைமருந்து பிரச்சனைகளுக்கான ஆலோசனைகள் மற்றும் சகல சுகாதார உதவிச்சேவைகள். (சுகாதார ஊக்குவிப்பு பணியகம்) - 1999

**தொகுப்பு**
**திருமதி. ஸ்ரீகுமரன் பிரசாந்தி**
**ஆசிரியை**
**கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 05C வகுப்பு மாணவர்கள்



ரவிச்சந்திரன் சங்கீர்த்தனன்
புள்ளி : 150



ஜெயேந்திரா ஆதீசன்
புள்ளி : 149



சுரேஸ்வரன் பிரணவன்
புள்ளி : 148



சர்மிலன் டபிசாந்
புள்ளி : 144



சசிதரன் தட்சயன்
புள்ளி : 142



ஜெயராம் மதுசன்
புள்ளி : 121



டேவிட்பீட்டர் பௌஸ்ரிகன் பீட்டர்
புள்ளி : 121



கலைவண்ணன் ஜானுஜன்
புள்ளி : 102



சசிகுமார் விபிசன்
புள்ளி : 91


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கணேசலிங்கம் அஸ்வினி
புள்ளி : 157



குழந்தையேஸ் யதுர்சனா
புள்ளி : 145



வினோத் குபட்சிகா
புள்ளி : 143



சுந்தரலிங்கம் தனுசிகா
புள்ளி : 141



அம்பிகைபாலன் அஸ்நவி
புள்ளி : 130



சுதர்சன் சயன்சிகா
புள்ளி : 120



யோகராசா ஜனிந்தா
புள்ளி : 119



நிசாந்தன் கிசாளினி
புள்ளி : 108



ஜெனார்த்தனன் ஜெஸ்மி
புள்ளி : 98


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜீவரட்ணம் தரணிகா
புள்ளி : 78


யாழ் மீன் மற்றும் தாவரங்களின் சொர்க்கம்

எண்.917, *K.K.S* வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.பே : 077 707 0711
Viber : 075 944 4608

அழகான கலர் மீன் வகைகள்
மீன் தொட்டிகள் செல்லப்பிராணிகள்,
பூக்கன்றுகள் மலிவான விலையில்
பெற்றுக் கொள்ள முடியும்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆச்சரியமான தகவல்கள்

- நண்டுக்கு தலை இல்லை
- ஆமைக்கு பற்கள் இல்லை
- வண்ணத்துப்பூச்சிக்கு வாய் இல்லை.
- கிவிப் பறவைக்கு இறக்கையில்லை.
- கடலில் முதலைகள் இருப்பதில்லை.
- யானையின் துதிக்கையில் எலும்புகள் இல்லை.
- மண்ணுளிப் பாம்புக்கு கண் இல்லை.
- அனைத்துப் பாம்புகளுக்கும் காதுகள் இல்லை.
- நட்சத்திர மீனுக்கு மூளை இல்லை.
- அன்னாசிப்பழத்திற்கு விதைகள் இல்லை.
- அத்தி, பலா பூப்பதில்லை.
- அரேபியாவில் ஆறுகள் இல்லை.
- அண்டார்டிகாவில் மரங்கள் இல்லை.
- இந்தியாவில் எரிமலைகள் இல்லை.
- பூடானில் திரைஅரங்குகள் இல்லை.
- நேபாளத்தில் பகலில் மழை பெய்வதில்லை.
- பறவைகளுக்கு வியர்வைச் சுரப்பிகள் இல்லை.
- மலைப்பாம்புகளுக்கு விஷம் இல்லை.
- யமுனை ஆறு கடலில் கலப்பதில்லை.
- ஜோர்டான் நதியில் மீன்கள் இல்லை.
- சிங்கப்பூரில் காக்கைகள் இல்லை.
- ஹவாய் தீவில் பாம்புகள் இல்லை.
- உத்தரப் பிரதேசத்தில் தென்னை மரங்கள் இல்லை.

**தொகுப்பு**
**திருமதி. சுகிதா நிமலேந்திரா**
**ஆசிரியை**
**கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகரன் புத்தகசாலை

A9 வீதி, கிளிநொச்சி.
A9 Road, Kilinochchi.

# AGARAN BOOK SHOP

T.P : 021 228 3967, 077 308 3965

சகல விதமான பாடசாலை உபகரணங்கள் அப்பியாசக் கொப்பிகள், பயிற்சிப் புத்தகங்கள், மாதிரி வினாத்தாள்கள் கடந்த கால வினாவிடைப் புத்தகங்கள் என்பவற்றை அதிகூடிய விலைக் கழிவில் பெற்றுக் கொள்ளலாம்.

- ரட்ணாவின் மெகா வாழக்கையாளர்
- Linc நிறுவனத்தின் வடமாகாண விநியோகஸ்தர்.
- தென்னிலங்கையின் மும் மொழி பத்திரிகைகளுக்கான முகவர்.
- லேக்கவுஸ் பத்திரிகையின் விளம்பர முகவர்
- சந்திரகுமார் ஆசிரியர் வெளியீடுகளின் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கான விநியோகஸ்தர்.

2020ஆம் ஆண்டில் புலமைத் தேர்வில் தோற்றிய
மாணவர்களை பாராட்டி வாழ்த்துவதுடன்
உங்களுக்கான அதி விரைவான சேவையை
வழங்கும் உங்கள் அகரன் புத்தகசாலை.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகேந்திரன் களஞ்சியம்

**இரணைமடுச் சந்தி, கிளிநொச்சி.**

**தொ.பே : 077 835 8831, 077 817 4116**



சகல விதமான பொருட்களையும்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
குறைந்த விலையில் நிறைந்த தரத்தில்
பெற்றுக்கொள்ள கிளிநொச்சி நகரின்
இரணைமடு மண்ணில் புதுப்பொலிவுடன்

**"மகேந்திரன் களஞ்சியம்"**

**உரிமையாளர் : மகேந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 05D வகுப்பு மாணவர்கள்



சந்திரன் கனிஸ்
புள்ளி : 156



அலைக்ஸ் நிவாசன்
புள்ளி : 146



செல்வானந்தன் மதுஜன்
புள்ளி : 143



பாக்கியராஜ் கஜாளன்
புள்ளி : 140



சசிக்குமார் அபிஷேக்
புள்ளி : 137



செல்வா ஹனிஸ்
புள்ளி : 126



சிவகரன் டிலக்சன்
புள்ளி : 125



ஸ்ரீகாந்தரூபன் டிலக்சன்
புள்ளி : 118



நகுலன் கவின்சன்
புள்ளி : 118



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சத்தியசீலன் துஷாந்தன்
புள்ளி : 84



உதயகுமார் ஸாயகி
புள்ளி : 159



சதீஸ்குமார் அபிகா
புள்ளி : 153



கந்தசாமி ஜோன் டினோஜா
புள்ளி : 153



ஸ்ரீகோகுலன் டிசானி
புள்ளி : 149



மயூரன் சங்கவி
புள்ளி : 148



சிறிதரன் சானுஜா
புள்ளி : 138



ரமேஸ்குமார் சஜினா
புள்ளி : 137



கோகிலதாசன் தியானி
புள்ளி : 130



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருட்சிவம் சேருஜா
புள்ளி : 116



ஜெயக்காந்தன் கிதுஸ்ரிகா
புள்ளி : 112



வேலு கிருசாயினி
புள்ளி : 103








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லொழுக்கமே முதல் படி

உண்மையின் உருவமாய் சத்தியத்தின் தரிசனமாய் விளங்கியவர் மகாத்மாகாந்தியடிகள். அவர் சிறுவயதில் மிகச் சாதாரண மாணவராகவே திகழ்ந்தார். ஆனால் சத்தியத்தையும் உண்மையையும் அந்தச் சிறுவயதிலேயே தன் மனதிற்குள் வரித்துக் கொண்டார்.

மகாத்மகாந்தி சிறுவயதில் பார்த்த அரிச்சந்திரன் நாடகமும் சிரவணன் தன் பெற்றோர் மேல் கொண்ட பக்தி பற்றிய கதாகாலட்சேபமும் தான் இவர் மனதில் ஆழப்பதிந்து அவரைப் பிற்காலத்தில் மகாத்மாவாக உலகிற்கு மாற்றிக் கொடுத்தது.

பிள்ளைப்பருவம் என்பது பசுமரம் போன்றது. பசுமரத்தில் ஓர் ஆணியைப் பதித்தால் எளிதாகப் பதிந்து விடும். அது போல மாணவர் பருவத்தில் கற்கப்படும் கல்வி தான் மனதிற்குள் நன்கு பதித்து பிற்காலத்தில் உங்களை வழி நடத்தும்.

அதனால் மாணவர் பருவத்திலேயே ஒவ்வொருவரும் நல்லொழுக்கங்களை ஒழுகப்பழகிக் கொள்ள வேண்டும். அதன் மூலம் நாளைய சிறந்ததொரு தலைமகனாக வாழ்வில் உயர முடியும்.

எல்லாப் பெற்றோர்களுமே தங்கள் பிள்ளைகள் பிற்காலத்தில் நல்லதொரு சிறந்த மனிதனாக உலகம் போற்றும் உன்னத மனிதனாக உயர வேண்டும் என்றே விரும்புகின்றனர். தங்கள் விருப்பத்தோடு அவர்கள் நின்று விடக்கூடாது தங்கள் பிள்ளைகளை வழி நடத்துவதில் அவர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும். சிறுவயது முதல் பெரியோர்களை மதிக்கும் பாங்கினையும் கற்றுக் கொடுக்க வேண்டும்.

அம்மாவிலிருந்து தான் அகிலமே ஆரம்பமாகிறது எனலாம். உலகில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் முதல் உலகம் அம்மா தான். அதனால் தான் அம்மாவிலிருந்து அகிலமே தொடங்குகிறது எனச்சொல்லப்படுகிறது.

இது வெறும் வாய் வார்த்தையன்று உலகில் உள்ள ஒவ்வொரு மனிதனும் ஒப்புக் கொண்ட உண்மை உணர்ந்து நிற்கும் உண்மை.

**"தாயைப் போல பிள்ளை**
**நூலைப் போல சேலை"** இது ஒப்புக்காகச் சொல்லப்பட்ட பழமொழி அன்று. அம்மாவின் உயர்வை உணர்த்தும் சொற்றொடர் ஆகும்.

**"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான்**
**மண்ணில் பிறக்கையிலே**
**நல்லவராவதும் தீயவராவதும்**
**அன்னை வளர்ப்பினிலே"** அன்னையின் கடமை எத்தனை மகத்தானது என இந்த வரிகள் மூலம் அறியலாம். பிள்ளையின் முதல் பழக்கவழக்கங்கள் அன்னையின் பழக்கவழக்கங்களை ஒத்தே அமைகிறது.

பிள்ளைகளைச் செல்லமாக வளர்க்கின்றோம் என்ற பெயரில் மற்றவர்களை **'வா போ'** என்று கூப்பிட்டுப் பழகும் அளவுக்கு வளர்க்கக் கூடாது **"வாங்கோ போங்கோ"** என்று மரியாதையுடன் பேசிப் பழகும்படி செய்ய வேண்டும். பெரியவர்களை மதிக்க வேண்டும் என்ற எண்ணத்தையும் அவர்கள் மனதில் தோற்றுவிக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்மை, உண்மை போன்றவற்றையும் குழந்தைப்பருவத்திலேயே பிள்ளைகளுக்கு உணர்த்த வேண்டும். அத்தோடு சிறிய உடற்பயிற்சிகளையும் செய்து பழக வேண்டும். அதனால் உடல் நலம் பெறும்.

காலைக்கடன்களைத் தவறாமல் முடிக்க வேண்டும். குறிப்பாக மலம் கழித்தல், மலச்சிக்கலே பல நோய்களுக்கும் காரணமாக அமைந்து விடுகின்றது. அதனால் மலம் கழிக்க நேரம் ஒதுக்கத் தயங்கக் கூடாது. பல்துலக்குதல், குளித்தல் போன்ற கடமைகளையும் மிகச்சரியாகச் செய்ய வேண்டும்.

அதிகாலையில் எழுந்து படிப்பது நமக்குப் புத்துணர்ச்சியைத் தருவதாக இருக்கும். மாணவர்கள் இந்தப்பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இப்பழக்கம் உள்ள மாணவர்கள் விழுந்து விழுந்து படிக்க வேண்டியதில்லை.

பாடசாலைக்கு தவறாமல் செல்ல வேண்டும். அப்போது தான் நாம் மாணவர் என்ற கடமையில் மிகச் சரியாக இருக்கிறோம் என்று உறுதியாகச் சொல்லலாம். அத்தோடு ஆசிரியரின் நன்மதிப்பையும் பெறலாம்.

ஆசிரியர், மாணவர் மீது கொள்ளும் நன்மதிப்பு மாணவனை நல்வழி நடத்தும். மேலும் அவருக்கு ஆர்வத்தை ஊட்டுவதாக அமையும். பெற்றோரிடம் நல்ல பிள்ளை என்று பெயரெடுப்பதைப் போல் ஆசிரியரின் நல்ல பெயரை பெற்றுத் தரும்.

மாணவர்கள் வாழ்வில் பல வெற்றிகளையும் பெற வேண்டும். அந்த வெற்றிக்கான நல்லொழுக்கமே என உணர்ந்து வாழ்வில் கடைப்பிடித்து உலகம் போற்ற உயர்ந்து சிறக்க வேண்டும்.

**தொகுப்பு**
**திருமதி. ஜெயகாந்தா உதயகுமார்**
**ஆசிரியை**
**கிளி/ கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகமூடி

(முகநூல் பக்கத்தில் படித்ததில் பிடித்த கவிதை)

சுகத்தைத் தருவேன் எனக் கூறிச்
சோடிக் காதைப் பிடித்த படி
முகத்தில் ஏறிக் குந்தியுள்ள
முகமூடிக்கு என் வணக்கம்

சிரித்து உணர்வை வெளிப்படுத்திச்
செய்திகள் சொல்லும் வாய் மூடும்
பரிதாபத்தைத் தந்து விட்டாய்
பைத்திய நிலைக்கேன் தள்ளி விட்டாய்?

மிருகமில்லை நாங்கள் என்று
மேன்மைப் படுத்திய சிரிப்பினை நாம்
ஒருவருக்கொருவர் வெளிப்படுத்த
உன்னால் தடைகள் வந்ததுவே!

முறுவல் முகத்தைத் தேட வைத்தாய்!
முத்துப்பற்களை மூட வைத்தாய்!
ஆறலைக்கின்ற கள்வர் போல்
அனைவரும் உலவ வைத்து விட்டாய்!

கண்ணைப் பார்த்து யாரென்று
கண்டு கொள்ள முடியவில்லை!
அண்ணன் தங்கை நண்பரையும்
அறிந்து கொள்ள இயலவில்லை

சாயம் பூசிய உதடுகளைச்
சந்திக்காது தடுத்து விட்டாய்?
வாயும் மூக்கும் மூட வைத்தேன்
மாற்றான் போன்று பார்க்க வைத்தாய்?

பொது வெளி தன்னிற் போகையிலே
போட வேண்டும் எனும் விதியை
புதவிதியாக மாற்றியுனைப்
போடாதோரைத் தண்டிக்கிறாய்!

எத்தனை நிறத்தில் வந்து விட்டாய்
எத்தனை அளவில் உலவுகிறாய்
மெத்தனமாக இருப்பவரை
மிகுந்த தண்டம் கட்ட வைத்தாய்!

முகத்தை மூடிப் பிறர் முன்னே
அகத்தை மறைக்கும் கயவர் போல்
இகத்தில் நாமும் நடமாட
ஏன்தான் செய்தாய் முகமூடி?

இன்று நாளை போகும் என்ற
எங்கள் ஏக்கம் போவதற்கு
என்று எம்மை விட்டகல்வாய்?
இயல்பு நிலைக்குத் திரும்ப வைப்பாய்?

**சபா.அருள் சுப்பிரமணியம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TEP GIFT PALACE

TRUST WITH EASE PICKING

கந்தசுவாமி கோவில் முன்பாக,
A9 வீதி, கிளிநொச்சி.
தொ.பே : 021 228 4878

இராமநாதபுரம் கிழக்கு பாடசாலை முன்பாக,
இராமநாதபுரம், கிளிநொச்சி.
தொ.பே : 021 228 2878

கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
தொ.பே : 021 228 2778

077 087 9929

#tepgiftpalace #tepgiftpalace

## எம்மிடம்...



அழகுசாதனப் பொருட்கள்
அன்பளிப்புப் பொருட்கள்
பாடசாலை உபகரணங்கள்
விளையாட்டு உபகரணங்கள்
தையல் வேலைக்கான பொருட்கள்
விழாக்களுக்கான அலங்காரப் பொருட்கள்

ஆகியவற்றை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்

## OUR SERVICES

| | |
|---|---|
| MIDNIGHT SURPRISE | SURPRISE PARTY |
| DECORATION | BIRTHDAY PARTY |
| DESIGN CAKES | ANNIVERSARY |
| PHOTOGRAPHY | SUCCESS PARTY |
| MAKE UP | WEDDING |

2020ஆம் ஆண்டில் புலமைத் தேர்வில் தோற்றிய
மாணவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 05E வகுப்பு மாணவர்கள்



பிரபாகரன் பபிராஜ்
புள்ளி : 142



கலைச்செல்வன் கேதுசன்
புள்ளி : 140



கமல்ராஜ் அபிராஜ்
புள்ளி : 139



சுஜிகரன் கபின்சன்
புள்ளி : 135



அன்ரனிராஜா போல்ஜெனதன்
புள்ளி : 130



மணிவண்ணன் கீர்த்திகன்
புள்ளி : 124



ஜீன் ஜலோஜன்
புள்ளி : 116



இளங்கோ அருண்
புள்ளி : 111



கனகலிங்கம் துவாரகன்
புள்ளி : 101



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கௌரிசங்கர் வர்ஷன்
புள்ளி : 92



விஜேந்திரன் துசிந்தன்
புள்ளி : 92



றேகன் பிறேசனா
புள்ளி : 153



நிசாந்தன் அபிநயா
புள்ளி : 142



வசந்தகுமார் ரசிகா
புள்ளி : 139



முகுந்தன் லாவண்யா
புள்ளி : 139



ஜெயக்குமார் சாரணா
புள்ளி : 139



வசந்தன் பூவிழி
புள்ளி : 132



பிரகலாதன் ப்ரணித்தா
புள்ளி : 132



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவராசா சங்கவி
புள்ளி : 127



சுகீதரன் சொப்பனா
புள்ளி : 122



சுதுகுமார் பவித்திரா
புள்ளி : 118




நந்தகுமார் சௌமியா
புள்ளி : 104



அரவிந்தன் கிஷானி
புள்ளி : 99



தீபன் விதுஷா






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவத்கீதை கூறும் அற்புதமான பாடம்

- வாழ்வென்பது உயிருள்ளவரை மட்டுமே.
- தேவைக்கு செலவிடு.
- அனுபவிக்கத் தகுந்தன அனுபவி.
- இயன்றவரை பிறருக்கு உதவி செய்.
- ஜீவகாருண்யத்தைக் கடைப்பிடி.
- அநேக ஆண்டுகள் வாழப்போவதில்லை.
- உயிர்போகும் போது எதுவும் கொண்டு செல்லப் போவதுமில்லை ஆகவே அதிகமான சிக்கனம் அவசியமில்லை.
- உயிருள்ளவரை ஆரோக்கியமாக இரு.
- உடல் நலம் இழந்து பணம் சேர்க்காதே.
- உன் குழந்தைகளைப் பேணு அவர்களிடம் அன்பாய் இரு.
- அவ்வப் போது பரிசுகள் அளி.
- அவர்களிடம் அதிகம் எதிர்பாராதே அடிமையாகவும் ஆகாதே.
- இருக்கும் போதே குழந்தைகளுக்கு கொடு.
- நிலைமையை அறிந்து அளவோடு கொடு எல்லாவற்றையும் தந்துவிட்டு பின் கையேந்தாதே.
- மாற்ற முடியாததை மாற்ற முனையாதே.
- மற்றவர் குடும்ப நிலைகண்டு பொறாமையால் வதங்காதே.
- அமைதியாக மகிழ்ச்சியோடு இரு.
- பிறரிடம் உள்ள நற்குணங்களைக் கண்டு பாராட்டு.
- நண்பர்களிடம் அளவளாவு.
- நல்ல உணவு உண்டு, நடை பயிற்சி செய்து உடல் நலம் பேணி இறைபக்தி கொண்டு குடும்பத்தினர். நண்பர்களோடு கலந்து உறவாடி மனநிறைவோடு வாழ்.
- அவரவர் வாழ்வு அவரவர் விதிப்படி என அறிந்து கொள்.

**தொகுப்பு**
**திருமதி.தவமலர் தவராஜசிங்கம்**
**ஆசிரியை**
**கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருமுறிகண்டிப் பிள்ளையார் ரான்ஸ்போட்

## Thirumurikandy Pillayar Transport

A9 வீதி, திருமுறிகண்டி.
A9 Road, Thirumurikandy.

T.P : 077 740 2836
024 320 0229

**மணல், 9x6 கல்லு, 1', 1/4', 1/2' சல்லி, 12x6 புளக்கல், 4x10 செங்கல், கிரவல் என்பவற்றை நியாயமான விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.**

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் O5F வகுப்பு மாணவர்கள்



நாகேந்திரம் கனிஸ்ரன்
புள்ளி : 122



சுஜீவன் சாமுவேல்
புள்ளி : 113



தேவலிங்கம் பகலவன்
புள்ளி : 104



கண்ணன் ஜெசூரன்
புள்ளி : 94



முகுந்தன் ரோயிசாந்
புள்ளி : 92



ரகுபரன் சாம்கிறிஸ்ரி
புள்ளி : 87



திரிச்செல்வம் கலையரசன்
புள்ளி : 85



கருணாகரன் கபிசன்
புள்ளி : 74



சுரேஸ்பண்டார சமித்மதுசன்
புள்ளி : 74



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாலசுப்பிரமணியம் சானுயன்



பாலச்சந்திரன் விதுர்சன்



கிருபாகரன் டினுசன்



செல்வநாயகம் தேனுசன்



ஜெயகுமார் பிகாசன்



லோகராசா கஜீபன்



யுவராஜ் மேரிகளின்



தவரூபன் ஜனந்தி
புள்ளி : 92



கருணைச்செல்வன் டிவேனிகா
புள்ளி : 79



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுகந்தன் தரணிகா
புள்ளி : 73



ரவிதாசன் சஜினிகா
புள்ளி : 71



தனலிங்கம் லதுசனா




சசிக்குமார் சகானா



ஜெகதீஸ்வரன் துஷாந்தி



நாகநாதன் கௌத்ரி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயற்சியும் பயிற்சியும்

புலமைப்பரிசில் பாடங்களை
புத்துணர்வோடு கற்பதற்கு
2020 ஆம் ஆண்டில்
எடுத்தடி வைத்தபோதே
கனவுகள் பல கண்டு
கல்வியைத் தொடர்ந்தோம்.

ஆசிரியர்களும் மாணவர்களும்
அன்பான பெற்றோர்களும்
புலமைப் பரிசிலிலே
புதியதொரு சாதனையை
நிலைநாட்ட வேண்டுமென்று
நிச்சயமாய் உறுதி கொண்டோம்.

இரண்டரை மாதம் தான்
இங்கிதமாய் கற்றிருப்போம்
பார் முழுவதும் ஏதோ- கொரோனா
பரவி வருகிறதாம்
என்ற செய்தி - உலகம்
எங்கும் பரவியது.

என்ன செய்வதென்று
ஏக்கத்துடன் இருந்தோம்
பாடசாலைகளும் ஏனைய
பணி செய்யும் இடங்களும்
முற்று முழுதாக
முடக்கப்பட்டன.

விரக்தியோடு நாம்
வீட்டிற்குள் இருந்தோம்
இணைய வசதியுள்ளோர்
இணைந்தோம் zoom வகுப்பில்
ஏனையவர் நாம் புத்தகத்தில்
ஏதேதோ படித்து வந்தோம்.

மீண்டும் பாடசாலைகள்
மீளத் திறந்தன
முகக் கவசங்களால் - எங்கள்
மூக்கும் வாயும் மூடி
இனங்காண முடியாதோராய்
மனங்கலங்க சென்று கற்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓராண்டுப் பாடத்திட்டத்தினை - ஆசிரியர்கள்
ஓயாமல் கற்பித்தனர்
பயிற்சி வினாத்தாள்களை
படபடென்று செய்வித்தனர்
ஐந்து மாதத்தில் சிலபஸ்
அப்படியே முடிந்தது.

ஒக்டோபர் பதினொன்றில் - பரீட்சையை
ஓடிப்போய் எழுதினோம்
வேக வேகமாக பெறுபேறு
வெளியாகி விட்டது
நல்ல பெறுபேறுகள் தான்
நமக்குக் கிடைத்தன.

200 புள்ளிகளைப் பெற்ற மாணவரும்
எங்கள் நாட்டிலுண்டு
தடைகளைக் கண்டு நாம்
தவித்துப் போனாலும்
முயற்சியும் பயிற்சியும் - எம்மை
முயன்றெழச் செய்தன

2020 ஆம் ஆண்டை நாம்
எப்போதும் மறவோம்
கொடிய வைரசின்
கொடுமைகளையும் மறவோம்
இவ்வாண்டில் கல்வி கற்ற
விதங்களையும் மறவோம்.

கடுமையான கட்டுப்பாடுகளை
கட்டவிழ்த்து விட்டாய்
சுதந்திரமாய் திரிந்த எங்கள்
சுகங்களையும் பறித்தாய்
இரக்கமற்று ஏராளம் - மனித
உயிர்களையும் எடுத்தாய்

இன்னும் என்னென்ன
செய்வதாய் உத்தேசம்
கொரோனா வைரசே - உன்
கொடுமைகளும் ஒருகாலம்
அடங்கத்தான் போகிறது
அதையும் அறிந்திடுவாய்.

**ஆக்கம்**
**திருமதி. யசோதா சசிபாபு**
**ஆசிரியை**
**கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்து புடைவையகம்

*H.N.B* முன்பாக டிப்போ வீதி,
கிளிநொச்சி.

*T.P : 077 953 0753*
*021 568 8665*

ஆண்கள், பெண்கள் மற்றும்
சிறுவர்களுக்குரிய அனைத்து
வகையான ஆடைவகைகளையும்
எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.



# S.B புத்தகசாலை

எண்.05, கனகபுரம் வீதி,
கிளிநொச்சி.
(மல்லிகா உணவகம் முன்பாக)
தொ.பே : 077 625 8120

சகல விதமான பாடசாலை உபகரணங்களை
மொத்தமாகவும் சில்லறையாகவும் அதிகூடிய
விலைக்கழிவில் பெற்றுக் கொள்ளலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவா பதிப்பகம்

புகையிரதக்கடவை அருகாமை, கனகபுரம் வீதி, கிளிநொச்சி.

021 228 5534 · 077 534 6766

077 849 8212 · r.sivapathippakam@gmail.com

இறப்பர் முத்திரைகளை அவசர தேவைக்கு குறுகிய நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

- நூல்கள்
- துண்டுவெளியீடுகள்
- அழைப்புக்கள்
- கணினி பக்க வடிவமைப்பு
- மென்காப்பிடுதல் (லெமனேற்)
- ஒளிர்படநகலாக்கல் (போட்டோப்பிரதிகள்)
- அலுவலக ஆள் அடையாள அட்டை
- திரை அச்சு (Screen Print)








போன்ற பல சேவைகளை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள்

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு"**


என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கமைவாக 2020ஆம் ஆண்டிற்கான புலமைப்பரிசில் விழாவிலே அனைத்து விதங்களிலும் உதவிக்கரம் நீட்டிய உள்ளங்களிற்கும் நன்றி சொல்லாமல் இருந்துவிட முடியாது.

அந்த வகையிலே விழா சிறப்படையக் கலந்து கொண்டு சிறப்பித்த பிரதமவிருந்தினர் மற்றும் சிறப்பு விருந்தினர்கள், கௌரவ விருந்தினர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள், அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் எமது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் யாவருக்கும் நன்றிகள் தெவித்துக் கொள்வதில் பெருமகிழ்வடைகிறோம்.

மேலும் மண்டப ஒழுங்கமைப்பாளர்கள், நன்கொடையாளர்கள், நலன்விரும்பிகள் மற்றும் இவ்விழாவிற்காக அறிந்தும் அறியாமலும் உதவிய அனைவருக்கும் நன்றிகள்.

2020ஆம் ஆண்டிற்கான புலமைச்சிட்டுக்கள் உங்கள் கைகளில் தவழ்வதற்கு பணஉதவி செய்த கல்விப்புலத்திற்கு உதவும் உள்ளங்களுக்கும் வர்த்தக விளம்பரதாரர்களுக்கும் வர்ணப்புகைப்படங்களை எடுத்து வடிவமைத்த துளசி புகைப்படக் கலைஞர்களுக்கும் அழகுற அச்சிட்டு நூல் வடிவில் வழங்கிய சிவா பதிப்பகத்தாருக்கும் மலர்க் குழுவின் சார்பாக நன்றிக்கரம் கூப்புகின்றோம்.

**மலர்க்குழுவினர்**
**கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







சிவா பதிப்பகம் - 021 228 5534, 077 849 8212

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org